**<u>In the court of the Additional Subordinate Judge, Tenkasi.</u>**

<u>Deposition of Witness</u>

O.S 233 /2022

பி.வா.சா.3 புணகர்த்தா

| | | |
|---|---|---|
| Name | : | புணகர்த்தா |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Occupation | : | |
| Age | : | |
| Date | : | 23.09.2025 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தாக்கல்

நான் இந்த வழக்கில் 3ம் நபர் ஆவேன். நான் என்னுடைய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் சரியானது தான். அதிலுள்ளது எனது கையெழுத்து தான்.

(நிரூபண வாக்குமூலம் தாக்கல். ஆவணங்கள் தாக்கல் இல்லை)

வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

எனக்கு கிருஷ்ணம்மாள், செல்வி, சந்திரன் ஆகியோர்களை தெரியாது. இசக்கியம்மாள், மாரியம்மாள், பானுமதி ஆகியோர்களை தெரியுமா என்றால் இசக்கியம்மாளை மட்டும் தெரியும். பானுமதி, மாரியம்மாளை தெரியாது. நான் எதற்காக சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் மனை பிரச்சனை சம்பந்தமாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். மனை என்ன சர்வே நம்பரில் உள்ளது என்றால் தெரியாது. அது யாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் கிருஷ்ணன் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். வழக்கு சொத்தானது கிருஷ்ணனுக்கு மட்டுமே கிடைத்தது. வேறு யாருக்கும் கிடைக்கவில்லை. கிருஷ்ணனுக்கு எவ்வாறு சொத்து கிடைத்தது என்றால் தெரியவில்லை. எனக்கும் சொத்தானது இலவச பட்டா மூலம் கிடைத்தது. எந்த வருடம் இலவசபட்டா கொடுக்கப்பட்டது என்றால் 35 வருடங்கள் கடந்து விட்டது. கிருஷ்ணனுக்கு கொடுத்த சொத்து பல நாட்களாக காலிமனையாக இருந்தது

என்றால் சரிதான். எந்த வருடம் வீடு கட்டினார் என்றால் 30 வருடத்திற்கு முன்பு வீடு கட்டினார். சமீபத்தில் வீடு கட்டவில்லை. முன்னர் கட்டிய வீட்டில் அவரது மகன் உள்ளார். 30 வருடத்திற்கு முன்பு இசக்கியம்மாளின்தாயார் தான் அந்த வீட்டை கட்டினார். இசக்கியம்மாள் கட்டவில்லை. எந்த வருடம் வாய்மொழியாக பாக பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் 30 வருடம் இருக்கும். எந்த ஆண்டு என்று எனக்கு தெரியாது. வாய்மொழி பாகம் செய்யும் போது யார் யார் இருந்தார்கள் என்றால் நான் பாகம் பிரித்து கொடுத்ததை நான் பார்க்கவில்லை. இசக்கியம்மாளுக்கும், கோபாலுக்கும் பாகம் பிரித்து கொடுப்பதாக சொன்னார். தென்புறம் கோபாலுக்கு பாகமாக கொடுக்கப்பட்டதாக கூறும் நிலையில் அவ்வாறு கோபாலுக்கு இலவசமாக பட்டா கொடுக்கப்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தானது கிருஷ்ணனுக்கும், அவரது மனைவி பண்டாரத்திக்கும் சேர்த்து கொடுத்து என்றும், கிருஷ்ணனுக்கு தனியாக கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. கிருஷ்ணன் எப்போது இறந்தார் என்றால் தெரியாது. அவரது தாயார் இறந்த விபரம் தெரியும். கிருஷ்ணனின் முதல் மனைவி பண்டாரத்தி ஆவார். 2 வது மனைவி திருமலை ஆவார். 2 வது மனைவியை நான் தான் திருமணம் செய்து வைத்தேனா என்றால் இல்லை. 2 வது திருமணம் முடித்து எனக்கு நேரடியாக தெரியாது. அருகில் இருந்தால் சொல்லி கொண்டார்கள். 2 வது மனைவியின் குழந்தைகள் சொத்தில் பாகம் உள்ளதாக பங்கு கேட்கவில்லை என்றால் கேட்டார்கள். இசக்கியம்மாளிடம் கேட்டார்கள். முதல் மனைவியின் பிள்ளைகள் யார் என்றால் ஒரே மகன் சுப்பையா ஆவார். சுப்பையா முதல்தாரத்து மகன் என்பதற்கு ஏதேனம் ஆவணம் தாக்கல் செய்துள்ளது தெரியுமா என்றால் தெரியாது. சுப்பையா எப்போது இறந்தார் என்றால் தெரியவில்லை. எங்கு வைத்து இறந்தார் என்றால் தெரியவில்லை. சுப்பையாவிற்கு 4 குழந்தைகள். பெயர்கள் தெரியாது. பெயர்களை மறந்து விட்டேன். கிருஷ்ணனுக்கு 2 வது திருமணம்

நடைபெறவில்லை என்றும், அவருக்கு சுப்பையா என்ற மகன் இல்லை என்றால் சரியல்ல. நான் வெளியூருக்கு வேலைக்கு சென்றுவிட்டதால் சுப்பையா இறந்தது பற்றி தெரியவில்லை. சுப்பையாவின் மனைவி பெயர் என்னவென்றால் தெரியவில்லை. சுப்பையாவின் மனைவி பெயர், மகன் பெயர் எதுவும் தெரியாமல் சுப்பையா என ஒருவர் இருந்தார் என கூறுவது பொய் என்றால் சரியல்ல. சொத்தை வாய்மொழியாக பாகம் பிரித்து கொண்டதாக கூறுவதும், தென்புறம் சுப்பையாவிற்கு ஒதுக்கப்பட்டதாக கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. நான் சொத்தை பார்த்து இல்லை என்றும், சொத்தை பிரித்து கொண்டதாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் உண்மையில் சாட்சியம் அளிக்க வந்திருந்தால் எனக்கு இசக்கியம்மாளின் மகள்களான 2,3 பிரதிவாதிகளை தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. அவர்களை யார் என தெரியவில்லை என கூறுவதால் சொத்து விபரம், மற்றும் வழக்கு விபரம தெரியாது என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிப்பதால் எனது சாட்சியம் ஏற்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. வாதிகளுக்கு பாகம் கிடைக்கதகக்கது என்றால் சரியல்ல.

(ஒம்) எஸ்.முருகவேல்,

கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.